## யார் எந்தக் கூட்டணியில் வந்தாலும் கவலை இல்லை:

# ஒவ்வொரு வீட்டுப் பயனாளியையும் தொடர்பு கொண்டு கழகச் சாதனைகளைச் சொல்லி பிரச்சாரம் செய்யுங்கள்!

## திருவெண்ணெய்நல்லூர் கலைஞர் சிலை திறப்பு விழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**விழுப்புரம், நவ.7 -**

**விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் திருவுருவச்சிலையை, தி.மு. கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரையாற்றி னார்.**

**அப்போது, கடல் போல திரண்டிருந்த திருவெண்ணெய்நல்லூர் மக்களிடையே கலைஞரின் புகழையும், அவர் வழியிலான திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களையும் எடுத்துரைத்து உரையாற்றினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:

விழுப்புரம் மாவட்டத்தில், கலைஞர் அவர்களின் சிலையைத் திறந்து வைக்க எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் நூற்றாண்டு நாயகர் தலைவர் கலைஞர் அவர்களுக்குத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் சிலை திறக்க வேண்டும் என்று, நம் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டிருந்தார்கள்.

### அமைச்சர் பொன்முடி

அதன் பேரில், தலைவர் அவர்கள் தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், அங்கு தலைவர் கலைஞரின் சிலையைத் திறந்து வைக்கின்ற அந்தப் பொறுப்பை ஏற்று இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இதே விழுப்புரத்தில் நம் கலைஞர் அறிவாலயத்தில் மூன்று வருடங்களுக்கு முன்பு கலைஞரின் திருவுருவச் சிலையை, நம் தலைவர் அவர்கள்தான் திறந்து வைத்தார்.

இப்பொழுது, அதே விழுப்புரம் மாவட்டத்தில் எனக்கு இந்த வாய்ப்பை கொடுத்தமைக்கு நம் அமைச்சர் அண்ணன் பொன்முடி அவர்களுக்கும், மாவட்டப் பொறுப்பாளர் கெளதம்சிகாமணி, அனைத்து மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக கொள்கிறேன்.

### மறக்க முடியாத பந்தம்

இந்த விழுப்புரம் மாவட்டத்திற்கும், எனக்கும் நெருங்கிய சொந்தம் உண்டு. மறக்க முடியாத பந்தம் உண்டு. பலமுறை, இந்த விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தந்து இருக்கிறேன். அமைச்சராக வருகை தந்து இருக்கிறேன், சட்டமன்ற உறுப்பினராக வருகை தந்து இருக்கிறேன். முதன்முறையாகத் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்று, உங்களின் வாழ்த்துகளையும், அன்பையும் பெற்று, அதுவும் முதல் நிகழ்ச்சியே தலைவர் கலைஞரின் சிலையைத் திறக்க வைக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன்.

இன்று துணை முதலமைச்சராக, அமைச்சராக, சட்டமன்ற உறுப்பினராக, அதுவும் விளையாட்டுத்துறையின் அமைச்சராக, சர்வதேச அளவிலும் இந்திய அளவிலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளைத் துவக்கி வைக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன்.




ஆனால், 21 ஆண்டுகளுக்கு முன்பு 2003-ஆம் ஆண்டு முதன்முறையாக நம் தலைவர் பெயரில் இருக்கின்ற தளபதி நற்பணி மன்றத்தின் சார்பாக நம் மாவட்டப் பொறுப்பாளர் கெளதம் சிகாமணி அவர்கள் ஏற்பாடு செய்த விளையாட்டுப் போட்டிதான் பொதுவாழ்வில் கலந்துகொண்ட முதல் விளையாட்டுப்போட்டி.

### கலைஞர் சிலை

விழுப்புரத்தில் ஆரம்பித்தது, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் விளையாட்டுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, செயலாற்றிக் கொண்டு இருக்கிறேன். இன்றைக்கு, தலைவர் கலைஞரின் சிலையை நாம் திறந்து வைக்கிறோம் என்றால், கலைஞரின் கொள்கைகளை, கலைஞரின் லட்சியங்களை, கலைஞரின் எழுத்துகளை மக்களிடம் கொண்டுபோய் சேர்க்கப் போகிறோம் என்று அர்த்தம்.

கலைஞர் வழியில், இன்றைக்கு நம் தலைவர் அவர்கள், நம் திராவிட மாடல் அரசைக் கடந்த மூன்றரை ஆண்டுகளாகச் சிறப்பாக நடத்தி வருகிறார். மக்களுக்குப் பயனளிக்கும் பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறார். உதாரணத்திற்கு ஒரு நான்கு ஐந்து திட்டங்களை மட்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

### மாதம் 20 லட்சம் மாணவிகள்

நம் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் தேர்தல் அறிக்கையில் நாம் சொன்ன வாக்குறுதி. பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதித் திட்டத்தைக் கொடுப்பேன் என்று சொல்லி, முதலமைச்சராகப் பொறுப்பேற்று முதல் கையெழுத்து போட்டது மகளிருக்கான விடியல் பயணம் திட்டம்தான்.

இன்றைக்கு, ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் தொள்ளாயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். இந்தத் திட்டத்தை மற்ற மாநிலங்களில் செயல்படுத்தத் தொடங்கி இருக்கிறார்கள். அதேபோல் பல்வேறு திட்டங்கள் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வரவேண்டும், படிக்க வேண்டும் என்று புதுமைப் பெண் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தினார்.

அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி எந்தக் கல்லூரியில் சென்று படித்தாலும், ஒவ்வொரு மாணவிக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையாக, புதுமைப்பெண் திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. மாதம் 20 லட்சம் மாணவிகள் பயன்பெறுகிறார்கள். அதேபோல் மாணவர்க ளுக்கு தமிழ்புதல்வன் என்ற திட்டம் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

### காலை உணவுத் திட்டம்

வேலைக்குச் செல்கின்ற பெற்றோர்கள் காலையில் எழுந்து வெறும் வயிற்றோடு குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவார்கள். ஆனால், இன்றைக்குப் பெற்றோர்கள் வாழ்த்தி, நம் குழந்தையைப் பார்த்துக் கொள்ள, முதலமைச்சர் இருக்கிறார், நம் திராவிட மாடல் அரசு இருக்கிறது என்று, ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை, அரசுப் பள்ளியில் படிக்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் இந்தியாவிலேயே முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நம் தமிழ்நாட்டில்தான் செயல்படுத்தப்படுகிறது.

### மகளிர் உரிமைத்தொகை

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒரு திட்டம். நாம் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று சொல்லி, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கி, இன்று வரை ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை திட்டம் வழங்கப்பட்டு இருக்கிறது.

ஒரு சில மாவட்டங்களில் ஒரு சில பேருக்கு பெயர் விடுபட்டு இருக்கிறது. குறைகள் இருக்கின்றன. ஆனால், இன்றைக்கு உங்களுக்கு உறுதி அளிக்கிறேன். விரைவில் அந்தக் குறைகள் எல்லாம் நிவர்த்திச் செய்யப்பட்டு, தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம், கலைஞர் உரிமைத் தொகை திட்டம் வழங்கப்படும் என்ற உறுதிமொழியைக் கூறிக்கொண்டு, இன்னும் 16 மாதங்கள்தான் இருக்கின்றன.

நம் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். பொதுகுழுவில் பேசினார். முப்பெரும் விழாவில் சூளுரைத்தார். உறுதிமொழி ஏற்றார்.

என்ன? நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை கொடுத்தீர்கள். அதுவும் இந்த விழுப்புரம் தொகுதியில் நம் கூட்டணிக் கட்சி வேட்பாளர் அண்ணன் ரவிக்குமார் அவர்களை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்புனீர்கள். இன்னும் சொல்லப்போனால், ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் 40 க்கு 40 என்ற 100 சதவிகித வெற்றியை நம் கழகத் தலைவர் அவர்களுக்கு, நம் திராவிட மாடல் அரசிற்குக் கொடுத்தார்கள். அதேபோல் சில மாதங்களுக்கு முன்பு, நடந்த விக்கிரவாண்டித் தொகுதி இடைத்தேர்தலில் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 20 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் நம் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களை வெற்றிபெற வைத்தீர்கள்.

### மீண்டும் முதலமைச்சர்

அதன் தொடர்ச்சியாக, நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளுக்குக் கொடுக்கின்ற ஒரு சான்றிதழாக நீங்கள் வர இருக்கின்ற 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, நம் இந்தியா கூட்டணி, தலைவர் அமைக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைக்கின்ற வெற்றிக் கூட்டணிக்கு, நீங்கள் ஆதரவு கொடுத்து, அந்த வெற்றியைத் தேடித்தந்து 234 தொகுதிகளில், குறைந்தது 200 தொகுதிகளில் தி.மு.க வெற்றிப் பெற்று, நம் முதலமைச்சர் மீண்டும் அந்த முதலமைச்சர் நாற்காலியில் உங்களின் ஆதரவோடு உட்கார போகிறார் என்ற நிலைமையை, நீங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு இந்த விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் இவ்வளவு பெரிய வரவேற்பைக் கொடுத்து இருக்கிறீர்கள். அந்த வரவேற்பைக் கொடுத்த உங்கள் அத்தனைப் பேருக்கும், கழக நிர்வாகிகளுக்கும், தொ.மு.ச-வை சேர்ந்தவர்களுக்கும், இளைஞர் அணி தம்பிமார்களுக்கும், பொதுமக்களுக்கும், அனைத்து அணிகளைச் சேர்ந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, இன்றிலிருந்து நம் 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரத்தை நாம் மேற்கொள்வோம்.

### ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பயனாளி

நம் அரசின் மூன்றரை ஆண்டுத் திட்டங்களை, மக்களிடம் கொண்டு சேர்ப்போம். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பயனாளி இருக்கிறார்கள். அந்தப் பயனாளிகளைத் தொடர்புகொண்டு நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் பிரச்சாரத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று சூளுரைத்து, கலைஞர் சிலையின் முன்பு நாம் அனைவரும் உறுதி ஏற்போம்.

வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் யாராக இருந்தாலும், நம்மை எதிர்த்து யார் வந்தாலும், எப்பேர்பட்ட கூட்டணி அமைத்தாலும், எந்தத் திசையில் இருந்து வந்தாலும், அது டெல்லியில் இருந்து வந்தாலும் சரி, இங்கு லோக்கலில் இருந்து வந்தாலும் சரி, அவர்களுக்கு தி.மு.க வெற்றியை மட்டுமே விடுக்கும் என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பை அளித்த அண்ணன் பொன்முடி அவர்களுக்கும், மாவட்டப் பொறுப்பாளர் கெளதம்சிகாமணி அவர்களுக்கும், மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், இளைஞர் அணி தம்பிமார்களுக்கும், வந்திருக்கின்ற அனைவருக்கும் நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

---

## தேவகோட்டையில் சிவகங்கை மாவட்ட

# கழக முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் வே.ரூசோவின் 26 வது ஆண்டு நினைவு நாள்!

### அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் அமைதிபேரணி!

*சிவகங்கை, நவ. 7 -*

சிவகங்கை மாவட்ட கழக முன்னாள் இளைஞரணி அமைப்பாளர். வே. ரூசோ. தேவகோட்டையைச் சேர்ந்தவர்.

இவர் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவராக இருந்தவர். 1998. நவம்பர் 8ம் தேதி மரணம் அடைந்தார்.

அவரது நினைவினை போற்றிடும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 8ம் தேதி நினைவுதினம் அனுசரிக்கப்படுகிறது.

நாளை 8ம் தேதி வே.ரூசோவின் 26 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தேவகோட்டை தியாகிகள் பூங்காவில் இருந்து மாவட்டக் கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் அமைதி பேரணி நடைபெறுகிறது.

பேரணி முடிவில் காரைக்குடி ராம்நகர் சாலையில் உள்ள ரூசோவின் நினைவிடத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் உட்பட கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்துகிறார்கள்.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

---

## திண்டுக்கல் மாநகர கழக வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்

*திண்டுக்கல், நவ. 7 -*

திண்டுக்கல் மாநகரக் கழகத்தின் வாக்குச் சாவடி முகவர்கள் கூட்டம் திண்டுக்கல்லில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாநகர அவைத் தலைவர் முகமது இப்ராகிம் தலைமை தாங்கினார். மாநகர கழக செயலாளரும் துணைமேயருமான ராஜப்பா வரவேற்புரை ஆற்றினார். கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் மற்றும் தலைமை கழக சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும், மாநில நெசவாளர் அணி இணை செயலாளர் கோவிந்தசாமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்.

கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பி.செந்தில்குமார் பேசும்போது: வாக்குசாவடி முகவர்கள் கழகத்தின் அனைத்து நிர்வாகிகளுடன் இணைந்து பணியாற்றிட வேண்டும். தலைவர் அவர்களை மீண்டும் முதல்வராக அமர்த்திட வேண்டும். ஆகவே நீங்கள் இன்று முதல் அனைத்து கழக பணிகளையும் சிறப்புடன் செய்திட வேண்டும். வாக்குச்சாவடி முகவர்கள் ஒவ்வொரு பகுதியிலும் பொதுமக்களை நேரில் சந்திக்க வேண்டும். எதிர்ப்பிலேயே வளர்ந்த இயக்கம் புதிதாக கட்சியை தொடங்கியவர்கள் எல்லாம் கழகத்தை ஒழிப்போம் என்று சொல்லி வந்தனர். சொல்லி வந்தவர்களே காணாமல் போனது வரலாறு. இந்த மாபெரும் இயக்கத்தை யாராலும் எதுவும் செய்துவிட முடியாது. வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் கழகம் வெற்றி பெற்று மீண்டும் தமிழகத்தின் முதல்வராக கழகத் தலைவர் அவர்களே பதவியில் அமர்வார்கள். இன்று முதல் நமது பணிகளை தொடங்கி சிறப்பாக முடிக்க வேண்டும் இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் பிலால் உசேன், நாகராஜன், மாநகர மேயர் இளமதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த கூட்டத்தில் மாநகர கழக துணைச் செயலாளர் முகமது சித்திக்,அழகர்சாமி, பொருளாளர் சரவ ணன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் அக்பர், பகுதி கழக செயலாளர்கள் சந்திரசேகரன், ராஜேந்திரகுமார், ஜானகிராமன், பஜ்ருல் ஹக் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், பகுதி கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---







கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி நேற்று (06.11.2024) ஆற்காடு நகராட்சி, ஆற்காடு நகர்ப்புர ஆரம்ப சுகாதார வளாகத்தில் ரூ.31 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சித்த மருத்துவமனை கட்டடத்தை திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி , நகர செயலாளர் ஏ.வி.சரவணன், அவைத்தலைவர் பி.என்.எஸ்.ராஜசேகரன், நகர மன்ற தலைவர் திருமதி. தேவி பென்ஸ் பாண்டியன், நகராட்சி ஆணையாளர் வெங்கடலட்சுமணன். நகரமன்ற உறுப்பினர்கள் திருமதி. பாஞ்சாலி வெங்கடேசன், திருமதி. செல்வி ரமேஷ் , துணைச் செயலாளர் சொக்கலிங்கம், பொருளாளர் கஜேந்திரன், மாவட்டப் பிரதிநிதி லிங்கேஷ், சிவா, மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முனைவர் மா. நன்னன்
### நவம்பர் 7 (2017)



தந்தை பெரியார், புரட்சிக் கவிஞர் பாவேந்தர், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் அன்பழகனார் ஆகியோரோடு நட்புக் கொண்டு, பகுத்தறிவுக் கொள்கைப் பாதையில் தொடர்ந்து பயணித்தவர்.

தொடக்கப்பள்ளி முதல் படிப்படியாக உழைப்பால் உயர்ந்து, கல்லூரிப் பேராசிரியர், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் எனப் பணியாற்றி பல பெருமைகளைப் பெற்றவர்.

திராவிட இயக்கம், சுயமரியாதை, தன்மானம், பகுத்தறிவு, தமிழ் மொழி ஆகியவற்றில் பற்றுக்கொண்டு வாழ்ந்தவர். இளைஞர்களுக்கு திராவிட இயக்க உணர்வுகளை ஊட்டி தமிழ்த் தொண்டு ஆற்றி வந்தவர். கழகத்தின் தொடக்க காலத்திலிருந்தே உறுப்பினராக இருந்தவர். கழக தலைமை இலக்கிய அணியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, கழக இளைஞர் அணி சார்பில் தமிழகம் முழுவதும் நடைபெற்ற ஒவ்வொரு "பயிற்சி பாசறை" வகுப்புகளில் பங்கேற்று சமூகநீதி, திராவிட இயக்கம், சுயமரியாதை பற்றி கழக இளைஞர் அணியினருக்கு விளக்கியவர்.

1991–ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் "பெரியார் விருது" பெற்றவர். அத்துடன் இவரது தமிழ்ப் பணிக்காக "தமிழ்ச் செம்மல் விருது", "திரு.வி.க. விருது" ஆகிய விருதுகளை பெற்றவர்.

தம் வாழ்நாளில் பெரும் பகுதியை தமிழ்மொழி கற்பித்தல், வளர்த்தல், பிழை திருத்தல், செம்மைப் படுத்துதல் என்ற முறையில் பணியாற்றி, பகுத்தறிவு நெறி தழுவி வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**